**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**காட்டுமன்னார்கோயில்.**

**சி.சி.168 / 2014**

அ.சா. 8 வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ரவி | **ஊர்** | மதனகோபாலபுரம் |
| தந்தை **பெயர்** | ஜெயராமன் | **வட்டம்** | **காட்டுமன்னார்கோயில்** |
| **வயது** | **46** | **மாவட்டம்** | |
| **தொழில்** | | | |
| **காவல் நிலையம்** | சோழத்தரம் **காவல்நிலையம்** | | |

**The Oaths Act** 1969 (**Act** 44/1969)-ன் விதிமுறைகளின் படி 28.04.2025 நாளாகிய இன்று திரு. **M.Sam Eugine Jebakumar, B.E.,B.L.,** காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**பா.நா.சு.ச. பிரிவு 355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மதனகோபாலபுரத்தில் குடியிருந்து வருகிறேன். வீரமணி, சகாதேவனை தெரியும். வீரமணியும் சகாதேவனும் வியாபாரத்திற்கு சென்றுவிட்டு வரும்போது விபத்து நடந்ததாக கேள்விப்பட்டேன். சகாதேவன் விபத்தில் இறந்துவிட்டார். நான் பிரேத விசாரணையின் போது தான் நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த விபத்து பேருந்தில் அடிபட்டு ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். இந்த விபத்து

எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**காட்டுமன்னார்கோயில்.**

**சி.சி.168 / 2014**

அ.சா. 7 வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | தமிழறியும் பெருமாள் | **ஊர்** | மதனகோபாலபுரம் |
| தந்தை **பெயர்** | இளையபெருமாள் | **வட்டம்** | **காட்டுமன்னார்கோயில்** |
| **வயது** | **73** | **மாவட்டம்** | |
| **தொழில்** | | | |
| **காவல் நிலையம்** | சோழத்தரம் **காவல்நிலையம்** | | |

**The Oaths Act** 1969 (**Act** 44/1969)–ன் விதிமுறைகளின் படி 28.04.2025 நாளாகிய இன்று திரு. **M.Sam Eugine Jebakumar, B.E.,B.L.,** **காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்**

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**பா.நா.சு.ச. பிரிவு 355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் சிறுதொண்டமாதேவி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்று வருகிறேன். வீரமணி, சகாதேவனை தெரியும். 31.12.2013ம் தேதி எங்கள் கிராமத்தை சேர்ந்த சகாதேவன் மணிலா வியாபாரம் செய்துவிட்டு அந்த வியாபாரம் தொடர்பாக பாக்கி தொகை வசூல் செய்வதற்கு குமாரக்குடிக்கு சென்று மீண்டும் வீரமணியும், சகாதேவனும் திரும்பும்போது சென்னை நோக்கி சென்ற அரசு பேருந்து இடையில் டாடா ஏஸ் குறுக்கே வந்துவிட்டது. அதனால் அரசு பேருந்து உடனடியாக பிரேக்கை அழுத்தியதால் டாடா ஏஸ் வாகனமும், அரசு பேருந்தும் மோதி பின்னால் வந்த இருவரும் மோதி அடிப்பட்டது. அதில்

சகாதேவனுக்கு பலத்த அடிபட்டது. வீரமணிக்கு கையில் அடிபட்டது. சகாதேவன் கடலூர் தனியார் மருத்துமனையில் சிகிச்சை பெற்று வந்து சிகிச்சை பலனளிக்காமல் 08.01.2014ல் இறந்துவிட்டார். உடற்கூராய்வு முடிந்து நாங்கள் உடலை பெற்றுக் கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இது தொடர்பாக போலீசார் என்னை 08.01.2014 அன்று காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தனர். காலை சுமார் 11.00 மணியளவில் என்னை விசாரித்தனர். இந்த விபத்து சம்பந்தமாக கேள்விப்பட்டு சோழத்தரம் காவல்நிலையத்திற்கு 08.01.2014 அன்று வந்தேன். விபத்து தொடர்பாக கேள்விப்பட்டு தான் எனக்கு தெரியும். இந்த விபத்து யாருடைய அஜாக்கிரதையின் காரணமாக நடந்தது என்று என்னால் சொல்லமுடியாது. இந்த விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## காட்டுமன்னார்கோயில்.

**சி.சி.168 / 2014**

அ.சா. 6 வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | வீரமணி | **ஊர்** | மதனகோபாலபுரம் |
| தந்தை **பெயர்** | தண்டபாணி | **வட்டம்** | **காட்டுமன்னார்கோயில்** |
| **வயது** | **38** | **மாவட்டம்** | |
| **தொழில்** | | | |
| **காவல் நிலையம்** | சோழத்தரம் **காவல்நிலையம்** | | |

**The Oaths Act** 1969 (**Act** 44/1969)–ன் விதிமுறைகளின் படி 28.04.2025 நாளாகிய இன்று திரு. **M.Sam Eugine Jebakumar, B.E.,B.L.,** காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

பா.நா.சு.ச. பிரிவு 355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் மதனகோபாலபுரத்தில் குடியிருந்து வருகிறேன். பட்டியல் சாட்சி சகாதேவனை தெரியும். அவர் விபத்தில் இறந்துவிட்டார். 31.12.2013ம் தேதியன்று மாலை 4.15 மணிக்கு நானும் சகாதேவனும் இருசக்கர வாகனத்தில் ஆண்டிமடம் சென்றுவிட்டு மணிலா வியாபாரம் முடித்துவிட்டு வீடு திரும்பும்போது குமாரக்குடி சென்றபோது அரசு பேருந்து முந்தி செல்லும்போது ஓரமாக வந்து என்னை அனைத்து கீழே தள்ளிவிட்டது. நான் வாகனத்தை ஓட்டி சகாதேவன் உட்கார்ந்து வந்தார். எனக்கு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. என் பின்னால் வந்தவருக்கு தலையில் பலத்த

காயம் ஏற்பட்டது. அதன்பின்பு ஆம்புலன்சில் சிதம்பரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். என் பின்னால் அமர்ந்து வந்தவர் சிகிச்சைக்கு பின்னர் இறந்துவிட்டார். அந்த அரசு பேருந்தை ஓட்டியர் யார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் எப்பொழுது எங்கு வைத்து விசாரித்தார் என்றால் விபத்து நடந்த குமாரக்குடியில் வைத்து விபத்து நடந்த அரை மணி நேரம் கழித்து விசாரித்தார்கள். அதன் பின்பு போலீசார் என்னை எங்கும் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை. எனக்கு தெரிந்து இந்த விபத்திற்கு முழு காரணமும் அரசு பேருந்துதான். இந்த விபத்து சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. விபத்திற்கு பின்னால் நான் மயங்கிவிழுந்துவிட்டேன்.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.